2020 பிப்ரவரி 19]

திட்டம். அதாவது, போடி நகராட்சியில் பார்த்தீர்களென்றால், 20 மாதத்திற்குள் (குறுக்கீடு) 24 மாதத்திற்குள் முடிக்கக்கூடிய திட்டத்தை, 18 மாதத்திற்குள் முடித்திருக்கிறோம் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களின் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 49, மாண்புமிகு உறுப்பினர் திரு. அனிதா ஆர். ராதாகிருஷ்ணன், மாண்புமிகு உணவு மற்றும் நுகர்பொருட்கள் வழங்கல் துறை அமைச்சர் அவர்கள்.*

49—

நியாய விலைக் கடைக்குக் கட்டடம்

***35036—திரு. அனிதா ஆர். ராதாகிருஷ்ணன்:**

மாண்புமிகு உணவு மற்றும் நுகர்பொருட்கள் வழங்கல் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருச்செந்தூர் பேரூராட்சி, 11–வது வார்டு, முத்தாரம்மன் கோயில் தெருவில் நியாய விலைக் கடைக்குக் கட்டடம் கட்ட அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. இரா. காமராஜ், உணவு மற்றும் நுகர்பொருட்கள் வழங்கல் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தங்களின் அனுமதியுடன் திருத்திய விடையை இப்பேரவைக்கு அளிக்கிறேன்.*

(அ) மற்றும் (ஆ) திருச்செந்தூர் பேரூராட்சி, 11–வது வார்டு, முத்தாரம்மன் கோயில் தெருவில் செயல்பட்டு வந்த நியாய விலைக் கடை, 1,029 குடும்ப அட்டைகளுடன் ஆவுடையார்குளம், பாரதியார் தெரு என்ற புதிய முகவரியிலுள்ள வாடகைக் கட்டடத்தில் ஒரு வருடத்திற்கும் மேலாக இயங்கி வருகிறது. திருச்செந்தூர் தேர்வுநிலை பேரூராட்சியின் 11–வது வார்டுக்குள், அதாவது இந்த முத்தாரம்மன் கோயில் தெருவுக்கு உட்பட்ட பகுதிகளில் புதியதாக நியாய விலைக் கடைக்குக் கட்டடம் கட்ட நிலம் கிடைப்பது சிரமமாக உள்ளதால், முத்தாரம்மன் கோயில்

தெருவில் நியாய விலைக் கடைக்குக் கட்டடம் கட்டுவதில் தாமதம் ஏற்பட்டுள்ளது என்பதனை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. அனிதா ஆர். ராதாகிருஷ்ணன் அவர்கள்.

திரு. அனிதா ஆர். ராதாகிருஷ்ணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருச்செந்தூர் தேர்வுநிலை பேரூராட்சிப் பகுதியில், முத்தாரம்மன் கோயில் பகுதியில் நியாய விலைக் கடைக்கு இடம் இல்லை என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இங்கே பதில் சொல்லியிருக்கின்றார்கள். அந்தத் தெருவிலே ஒரு water tank கட்டப்பட்டிருக்கிறது. அதன் பக்கத்திலே இடம் இருக்கின்றது. அதுமட்டுமல்லாமல், பழுதடைந்த ஒரு சத்துணவுக் கூடம், இடிக்கப்பட வேண்டிய நிலையிலே இருக்கிறது. அங்குள்ள மக்கள் அந்தக் கருத்தைச் சொல்லி, அதை இடிக்க வேண்டிய சூழ்நிலை இருக்கின்றது. எனவே, அதை இடித்துவிட்டு அந்த இடத்திலே ரேஷன் கடை கட்டலாம். அந்த ரேஷன் கடையை அந்த இடத்தில் கட்டினால் அந்தப் பகுதியிலுள்ள மக்கள் சிரமமின்றி வந்து ரேஷன் பொருட்களை வாங்குவதற்கான வாய்ப்புகள் உண்டு. ஆகவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அதை ஆய்வு செய்து, அதைச் செய்து தருவார்களா என்பதைத் தங்கள்மூலம் கேட்க விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உணவு மற்றும் நுகர்பொருட்கள் வழங்கல் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. இரா. காமராஜ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முத்தாரம்மன் கோயில் தெருவில் நியாய விலைக் கடைக்குக் கட்டடம் கட்ட திருச்செந்தூர் கிராமம், புல எண் 1485/48–ல் உள்ள இந்த இடத்தைத்தான் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டிருக்கிறாரா என்பது தெரியவில்லை. அந்த இடத்தை நாங்கள் மறுபடியும் ஆய்வு செய்து தெரிந்துகொள்கிறோம். அதில் 17.50 சதுர மீட்டர் நிலம் ஆய்வு செய்யப்பட்டதில், மேற்கூறிய நிலமானது கிராமக் கணக்குப்படி, தெரு என்ற வகைப்பாட்டில் வந்துள்ளது. எனவே, அங்கு கட்டடம் கட்டுவதற்குத் தகுதியான புறம்போக்கு நிலம் இல்லை என்பதனால், அங்கே நியாய விலைக் கடைக்குக் கட்டடம் கட்டுவதற்கு சிரமம் ஏற்பட்டிருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் 600 சதுர அடி நிலத்தினைத்

2020 பிப்ரவரி 19]

தேர்வு செய்து கொடுத்தால், உடனடியாக கட்டடம் கட்டுவதற்கு உரிய ஏற்பாடுகளை மாண்புமிகு அம்மாவினுடைய அரசு செய்யும் என்பதனை இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 10–40

தூத்துக்குடி மாவட்டத்தில் செயல்படும் 961 நியாய விலை அங்காடிகளில், 113 அங்காடிகள் துறை சார்ந்த சொந்தக் கட்டடத்திலும், 461 அங்காடிகள் பிற துறைகளைச் சேர்ந்த அரசுக் கட்டடத்திலும், 132 நியாய விலை அங்காடிகள் வாடகை இல்லாத கட்டடத்திலும், 225 நியாய விலை அங்காடிகள் வாடகைக் கட்டடத்திலும் செயல்பட்டு வருகின்றன என்பதனை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். அந்தப் பகுதியில், 600 சதுர அடி நிலத்தைத் தேர்வு செய்து கொடுப்பீர்களானால், உடனடியாக அதற்குரிய ஏற்பாடுகள் செய்யப்படும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு, மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. அனிதா ஆர். ராதாகிருஷ்ணன் அவர்கள்.*

திரு. அனிதா ஆர். ராதாகிருஷ்ணன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, “உறுப்பினர் அவர்கள் இடத்தைத் தேர்வு செய்து தந்தால், உடனடியாக கட்டடம் கட்டுவதற்கான நடவடிக்கைகளை எடுப்போம்” என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் உறுதியளித்திருக்கின்றார்கள். அந்தவகையிலே, வருகின்ற திங்கட்கிழமையே அந்த இடத்தைத் தேர்வு செய்து தருகின்றேன். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் உடனடியாகக் கட்டடம் கட்டித் தருவதற்கு ஆவன செய்ய வேண்டுமென்ற கோரிக்கையோடு, செய்து தருவார்களா என்ற கேள்வியையும் கேட்டு அமர்கின்றேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உணவு மற்றும் நுகர்பொருட்கள் வழங்கல் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. இரா. காமராஜ்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினரான மாண்புமிகு முன்னாள் அமைச்சர் அவர்களுக்கு ஒரு தகவல் தெரியுமா, தெரியாதா என்று தெரியவில்லை. அந்தத் தகவல் தெரிந்தால், உடனே அதையும் அவரே செய்துவிடுவார் என்ற நம்பிக்கையோடு*

இந்தத் தகவலை தெரியப்படுத்துகிறேன். அதாவது, கடந்த ஜூன் 2019–ல், மாண்புமிகு செய்தி மற்றும் விளம்பரத் துறை அமைச்சர் அவர்கள், தனது சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து கோவில்பட்டியில் தகுதியான இடத்தைத் தெரிவு செய்து, இரண்டு நியாய விலை அங்காடிகளுக்கு சொந்தக் கட்டடங்களைக் கட்டிக் கொடுத்துள்ளார். அதேபோல, தூத்துக்குடி நகரம், அசோக் நகரில் மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் திருமதி கீதா ஜீவன் அவர்கள், தன்னுடைய சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து ஒரு நியாய விலை அங்காடிக்கு இடம் தெரிவு செய்து, சொந்தக் கட்டடம் கட்டுவதற்கு இடம் கொடுத்து, கட்டடத்தையும் கட்டிக் கொடுத்திருக்கிறார்கள். எனவே, மாண்புமிகு உறுப்பினரான முன்னாள் அமைச்சர் அவர்கள், ஒரு கட்டடம் கட்ட வேண்டுமென்றால், அவர் இரண்டு கட்டடங்களைக் கட்ட வேண்டுமென்று நினைப்பார். எனவே, அதனை மாண்புமிகு உறுப்பினர் அவர்களே செய்தால், இன்னும் மகிழ்ச்சியாக இருக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 50, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆ. கோவிந்தசாமி, மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர் அவர்கள்.*

50—

கருத்தடை அறுவை சிகிச்சைப் பிரிவு

***57147—திரு. ஆ. கோவிந்தசாமி:**

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பாப்பிரெட்டிப்பட்டி அரசு மருத்துவமனையில் கருத்தடை அறுவை சிகிச்சைப் பிரிவு துவக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு டாக்டர் சி. விஜய பாஸ்கர், மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*